# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)**

**ஆணை எண்: 242 /பேரூ/2022**
**நாள் : 22.12.2022**

திரு. M.A. சொக்கலிங்கம்,
ஏரல், தூத்துக்குடி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
ஏரல் தேர்வுநிலை பேரூராட்சி,
தூத்துக்குடி. – எதிர் மனுதாரர்

தூத்துக்குடி மாவட்டம், ஏரல் அஞ்சல், எண்.4/3, என்ற முகவரியைச் சேர்ந்த திரு. M.A. சொக்கலிங்கம் என்பவரது 28.11.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 29.11.2022 அன்று பெறப்பட்டு 242/பேரூ/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தூத்துக்குடி மாவட்டம், ஏரல் அஞ்சல், எண்.4/3, என்ற முகவரியைச் சேர்ந்த திரு. M.A. சொக்கலிங்கம் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்.

ஏரல் பேரூராட்சியில் உருவாகும் குப்பைகளை திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016ன் கீழுள்ள விதிகளின்படி மறுசுழற்சி, உரமாக்குதல் போன்ற திட்டங்கள் மூலமாக வெறும் 10% முதல் 20% வரை உள்ள குப்பைகளை ஊருக்கு ஒதுக்குப்புறமாக தான் கொட்டப்பட வேண்டும். ஆனால் ஏரல் பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்ட விதிகள் பின்பற்றாமல் வெறும் 5% குப்பைகளை உரமாக்குதல் மறு சுழற்சி செய்து வருகின்றனர். மீதி உள்ள 95% குப்பைகளை தாமிரபரணி ஆற்று கரையோரங்களில் கொட்டி புண்ணிய நதியான தாமிரபரணி நதியை மாசுபடுத்தி வருகின்றனர். பாதுகாக்க வேண்டிய பேரூராட்சி நிர்வாகமே தாமிரபரணி நதியை மாசுப்படுத்தியும் ஏரல் பேரூராட்சியில் இருந்து வரும் கழிவு நீர் நதியில் கலக்க விடுகின்றனர். இதனால் நதி மாசு அடைந்து நதியில் குளிக்கும் மக்களுக்கு தோல் வியாதி வருகிறது. நதிக்கரையில் பன்றிகள் வளர்க்கும் கூடங்கள் அதிகம் உள்ளது. அதிலிருந்து வரும் கழிவுகள் நதிநீரில் கலப்பதால் டெங்கு, மலேரியா, பன்றிக் காய்ச்சல் போன்ற பாதிப்புகள் வருகிறது. அதனை அகற்ற பேரூராட்சி செயல் அலுவலர், சுகாதார

மேற்பார்வையாளர் தடுக்கவும் பன்றிவளர்ப்பு கூடாரங்களை அகற்றவும் இல்லை மற்றும் பொது மக்கள் நீர்நிலைகளில் குப்பைகள், கட்டிடக் கழிவுகள், இறைச்சிக் கழிவுகள் கொட்டாதவாறு நீர்நிலைகளை பாதுகாப்பது உள்ளாட்சிகளின் கடமை என பல்வேறு வழக்குகளில் நீதிமன்றங்கள், தென்இந்திய தேசியபசுமைத் தீர்ப்பாயம் வழங்கிய தீர்ப்புகள் வழங்கியுள்ளது. அரசு கடித எண் 10434/நநீ IV(2)2016 நாள் 15.06.2016 மற்றும் கடித எண்.23913/நநீ(iv)(2)2016 நாள்:17.10.2016 மற்றும் தேசிய பசுமைத் தீர்ப்பாயம் 16.08.2016 அன்று தீர்ப்புகள் வழங்கியும் உயர் அதிகாரிகள் அளித்த சுற்றறிக்கைகளை மதிக்காமல் மற்றும் இயற்கை நமக்கு அளித்த நதிநீரை பாதுகாத்து நம் வருங்கால சந்ததிக்கு எடுத்து செல்ல வேண்டும் என சாமானிய மக்கள் கூட நினைக்கும் சிந்தனை இல்லாமல் ஏரல் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் சுகாதார மேற்பார்வையாளர் குப்பைகளை கொட்டுவதையும் கழிவு நீர் கலப்பதை கண்டும் காணாமல் நடவடிக்கை எடுக்காமல் இருந்து வருகின்றனர். மனுதாரர் ஆகிய நான் முதல் அமைச்சர் தனிப்பிரிவு இணையத்தில் அளித்த TN/MAWS/TUT/P/PORTAL/14 FEB 21/ 108294 மற்றும் 15 AUG 21/1616560 ஆகிய மனுக்களுக்கு எந்தவித நடவடிக்கை எடுக்காமல் பொறுப்பற்ற முறையில் பதில் அளித்து உள்ளார். குப்பைகளைக் கொட்டாதவாறு நடவடிக்கை எடுக்க உரிய மேல் அதிகாரிகளுடன் கலந்து ஆலோசனை பெற முயற்சிகள் செய்யாமல் மேலும், மேலும் குப்பைகள் சேர காரணமாக உள்ளார். இந்த குப்பைகளை தாண்டியே சுடுகாடு செல்லும் பாதை உள்ளது. மனிதன் தனது இறுதியாத்திரை செல்லும்போது கூட குப்பைகளை மற்றும் சுகாதாரம் இன்றி நாற்றத்தில் செல்ல வேண்டி உள்ளது. மேலும் ஏரல் பேரூராட்சியில் உள்ள நீர்தேக்கத் தொட்டிகளை மாதம் ஒரு முறை கூட சுத்தம் செய்வதில்லை. தாமிரபரணி ஆற்றில் இருந்து நேரடியாகவே நீர் ஏற்றம் செய்யப்படுகிறது. இதனால் நீர்தேக்கங்களில் சேறு, சகதிகள் தேங்கி உள்ளது. அதை சுத்தம் செய்வது இல்லை. சுத்தம் செய்வதாக கூறி மாதம் ஒரு நாள் குளோரின் பவுடர் மட்டுமே போட்டு சுத்தம்செய்வதாக கணக்கு காட்டுகிறார்கள். பேரூராட்சியில் கடை வீதி, பாரதியார் ரோடு பகுதியில் உள்ள கழிவுநீர் ஓடைகளை சுத்தம் செய்வதில்லை. 1992 வருடம் ஏரல் முக்கிய கடைவீதியில் ஆக்கிரமித்தல் அகற்றம் செய்யப்பட்டது. அதன் பிறகு மீண்டும் ஆக்கிரமிப்புகள் அதிகமாகிவிட்டது. நடைப்பாதை வியாபாரம் மற்றும் கடைக்கு வெளியே பொருள்கள் வைத்து வியாபாரம் செய்வதால் பொது மக்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டியவர்கள் ஆக்கிரமிப்புகளுக்கு துணை போகிறார்கள். மேலும் சுகாதார மேற்பார்வையாளர் தன் கடமையை செய்வதில்லை. அவரின் பணியை செயல் அலுவலரும் கவனிப்பதில்லை. நீர்தேக்கத் தொட்டிகளில் சுத்தம் செய்யும் தேதி, அடுத்து சுத்தம் செய்யும் தேதி குறிப்பிட வேண்டும். ஆனால் அவ்வாறு செய்வதில்லை. மேலும் பேரூராட்சியில் நடைபெறும் முறைகேடுகளை தடுக்கவும் முறைகேடுகளை வெளிக்கொணர ஆதாரங்கள் திரட்ட நான் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 கீழ் தகவல்கள் கேட்டால் தருவதில்லை. தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 விதிகளுக்கு எதிராக அலுவலகத்தில் நேரில் வந்து பார்த்துக் கொள்ளவும் என தகவல்கள் தருகிறார். நான் அலுவலகத்திற்கு நேரில் சென்றால் என் மீது பொய் வழக்கு பதிய வாய்ப்பு உள்ளது. பேரூராட்சி நிர்வாகம் மீது நான் பல்வேறு புகார்களை உயர்அதிகாரிகளுக்கும் சமூக வலைதளம் வெளியிட்டு வருவதால் எனக்கு இந்த சந்தேகம் மற்றும் பயம் வருகிறது. ஆவணங்களின் ஒளிநகல்கள் வழங்கினால் தங்களின் முறைகேடுகள் வெளிவந்துவிடும் என்பதால் RTI பிரிவு 2J மூலம் களஆய்வு செய்து ஆவணங்கள்

பார்வையிடவும் அனுமதி கேட்டால் வழங்குவதில்லை. முதல் மேல்முறையீடு செய்தும் தகவல்கள், அனுமதி வழங்காமல் இருப்பது மற்றும் தகவல்கள் முழுமையாக தராமல் அலைக்கழிக்க வைக்கும் போக்கை கடைப்பிடித்து வருகின்றார். இதன் மூலம் முறைகேடு நடப்பது உறுதியாக உள்ளது என சந்தேகம் ஏற்படுகிறது. ஏரல் பேரூராட்சியில் உள்ள வணிக வளாகக் கடைகளுக்கு கையூட்டு பெற்றுக் கொண்டு வருடம் 15% வரை உயர்த்த வேண்டிய வாடகையை வாங்காமல் குறைந்த வாடகை பெற்று நிர்வாகத்திற்கு இழப்பை ஏற்படுத்தி வருகிறார். ஏரல் பேரூராட்சியில் காய்கனி சந்தை மற்றும் பேரூந்து நிலையத்தில் உள்ள கழிப்பிடத்தை 2019–2020, 2020–2021 ஆண்டுகளில் ஏலம் விடாமல் பேரூராட்சி நிர்வாகத்திற்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தி உள்ளனர். பேரூராட்சி பகுதியில் நடைபெறும் சுகாதாரப்பணிகளில் பல்வேறு முறைகேடுகள் நடைபெறுகிறது. பேரூராட்சியில் நடைபெறும் பணிகளில் தரமற்ற பொருள்களால் வேலை நடைபெறுகிறது. ஒப்பந்ததார்களுடன் கையூட்டு பெற்றுக்கொண்டு தரமற்ற பணிகள் நடைபெற அனுமதிக்கிறார். வேலைகளின் ஒப்பந்தப்பணி ஆணைகள், பணிவேலை விபரங்கள், ஒப்பந்தாரர்களுக்கு வழங்கிய பில் தொகை, ஒப்பந்தாரர்கள் செய்த பணிப்பொருள்கள் அரசு தர சான்று பெற்றதற்கான சீட்டுகள் கேட்டால் தருவதில்லை. நடைபெறும் பணிகளின் விபரங்கள் பொதுமக்களுக்கு தெரிவிக்கும் வகையில் அறிவிப்பு பலகையில் வைப்பதில்லை. திடக்கழிவு மேலாண்மை திட்ட சுகாதார பணி செய்யும் வாகனங்கள் டீசல் பராமரிப்பு மற்றும் குடிநீர் பராமரிப்பு, மின்மோட்டார் பழுது பார்த்தல் என போலி பில்கள், புதிய கட்டிடங்களுக்கு, வணிக கட்டிடங்களுக்கு வரிவிதிப்புகள் விதிமுறைகளுக்கு எதிராக வரிவிதிப்பதன் மூலம் ஊழல் நடைப்பெறுகிறது. இது குறித்து திருநெல்வேலி மண்டல பேரூராட்சி உதவி இயக்குனர் மற்றும் சென்னை பேரூராட்சி இணை இயக்குனர் அவர்களுக்கும் அனுப்பிய புகார் மனுக்களுக்கு எந்தவித நடவடிக்கை இல்லை. மேலும், பேரூராட்சியில் மன்றத் தலைவிக்கு பதிலாக அவரது கணவர் தான் தலைவரின் பணிகளை மேற்கொண்டு வருகிறார். உள்ளாட்சி மன்ற விதிகளுக்கு எதிரானது என தெரிந்தும் செயல் அலுவலர் அவருடன் சேர்ந்து கொண்டு பல்வேறு முறைகேடு செய்து வருகின்றனர். இதற்கு ஆதாரம் பேரூராட்சியில் உள்ள கேமரா பதிவுகளே. இதை RTI-ல் கேட்டால் தருவதில்லை என்னால் திரட்டமுடிந்த ஆதாரங்கள் சமர்ப்பிக்கிறேன். தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் தகவல்கள் வழங்க மறுத்ததால் மேலும் ஆதாரம் வழங்க இயலவில்லை. எனவே நான் ஆதாரங்கள் திரட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் ஏரல் பேரூராட்சி பொது தகவல் அலுவலருக்கு செய்த 2J கள ஆய்வு மனு, 6(1) மனு ஒளிநகல் இணைத்து உள்ளேன். தகவல் ஆணையத்தில் 5 வழக்குகள் ஏரல் பேரூராட்சி மீது தகவல் வழங்காத காரணமாக உள்ளது என்பதனை தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் சில ஆதாரங்கள் புகைப்படமாகவும், வீடியோவாகவும் மொபைல் போனில் உள்ளது. விசாரணைக்கு நேரில் வரும்போது மேற்கண்ட ஆதாரங்கள் தங்களிடம் சமர்ப்பிக்க வாய்ப்பு அளிக்கவும். மேலும், ஏரல் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. தனசிங் மற்றும் சுகாதார மேற்பார்வையாளர் திரு. அடைக்கலம் ஆகியோர் மீது நான் சமர்ப்பிக்கும் ஆவணங்களின் அடிப்படையில் விசாரணை செய்து, இருவர் மீதும் துறைசார்ந்த நடவடிக்கை மற்றும் அரசுக்கு ஏற்படுத்திய இழப்புத்தொகையை அவர்களிடம் இருந்து வசூலிக்க வேண்டுகிறேன். தணிக்கை அதிகாரிகள் மூலம் மறுதணிக்கை செய்யவும் தாமிரபரணி நதிக்கரையில் கொட்டப்பட்ட குப்பைகளை அகற்றவும் இனிமேல் அந்த இடத்தில் குப்பைகள் போடாமல் இருக்கவும் அந்த இடத்தினை பூங்காவாக மாற்ற

உரிய துறை அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கவும், கடைவீதி ஆக்கிரமிப்பை அகற்ற ஏரல் செயல் அலுவலருக்கு உரிய துறை அலுவலர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கவும் வேண்டுகிறேன்" என தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி ஏரல் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ 07.12.2022 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவத்திற்கு 12.12.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 07.12.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**12.12.2022 அன்று மனுதாரர் நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.**

"தூத்துக்குடி மாவட்டம் ஏரல் பேரூராட்சியில் சேரும் குப்பைகளை மறு சுழற்சி முறையில் உபயோகப்படுத்தாமல், அக்குப்பைகளை பேரூராட்சியினர் தாமிரபரணி ஆற்றின் கரையோரத்தில் கொட்டி, நதியை மாசுபடுத்தி வருகின்றனர். ஆற்றின் கரையோரத்தில் பன்றிகள் வளர்க்கும் கூடங்கள் அதிகமாக உள்ளதால் அங்கிருந்து வெளியேரும் கழிவுகள் நதியில் கலப்பதால் நோய்கள் வரவாய்ப்புள்ளது. கழிவு நீர் கலப்பதை தடுத்திட பேரூராட்சியினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மேலும் ஏரல் பேரூராட்சியில் உள்ள மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகளில் மாதம் ஒருநாள் மட்டுமே குளோரின் பவுடர் போடப்படுகின்றன. கடைவீதிகளில் உள்ள கடைகாரர்கள் தங்களது கடைக்கு வெளியே உள்ள பேரூராட்சி இடத்தையும் ஆக்கிரமிப்பு செய்து பொருட்களை வைத்து வியாபாரம் செய்வதால் பொதுமக்கள் சிரமத்திற்குள்ளாகின்றனர். மேற்கண்ட ஆக்கிரமிப்புகளுக்கு பேரூராட்சி அலுவலர்கள் துணைபோகின்றனர். அதே போன்று வணிகக் கட்டடங்களுக்கு சரியாக வரி விதிப்பு செய்வதில்லை. ஒப்பந்தப் பணிகள் மேற்கொள்ளும்போது தரமற்ற பொருட்களைக் கொண்டு ஒப்பந்ததாரர்கள் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே, ஏரல் பேரூராட்சியில் நடைபெறும் மேற்கண்ட நிர்வாகச் சீர்கேட்டினை களையவும், குறிப்பாக தாமிரபரணி ஆற்றின் கரையோரத்தில் குப்பைகளை கொட்டாமல் தவிர்க்கவும், தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக் கொள்கிறேன் என குறிப்பிட்டுள்ளார்."

**12.12.2022 அன்று ஏரல் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறை மன்றத்தின் நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.**

" ஏரல் பேரூராட்சியில் வீடுகளில் தினசரி குப்பைகளை சேகரித்து அதனை மக்கும் குப்பை மற்றும் மக்கா குப்பை என தரம் பிரித்து, மக்கும் குப்பைகள் உரமாக்கப்படுகின்றன. பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரின் ஆய்வுக் கூட்ட அறிவுரைகளின் அடிப்படையில் ஏரல் பேரூராட்சியில் திடக் கழிவுகளை உரமாக்கும் பொருட்டு ஸ்ரீவைகுண்டம் தாலுகா வாழவல்லான் கிராமம் சிறுதொண்டநல்லூர் கிராமம் ஆகிய பகுதிகளில் 1.5 ஏக்கர் அளவிலான தகுதியான புறம்போக்கு நிலத்தினை தேர்ந்தெடுத்து அதனை மேற்படி

பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்து தருமாறு மாவட்ட வருவாய் அலுவலருக்கு 29.3.2019 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இடத்தை ஒதுக்கீடு செய்வது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோரை நானே நேரடியாக சந்தித்து இடவசதியை விரைவில் செய்து தருமாறு கோரிக்கை வைக்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏரல் பேரூராட்சியில் பன்றிகள் வளர்க்கக்கூடாது எனவும், மீறினால் அபராதம் விதிக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும் கழிவு நீர் தாமிரபரணி ஆற்றில் கலக்காமல் இருப்பதற்கு Sewage treatment filter Bed அமைக்கவும் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஏரல் பகுதியில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளில் அடிக்கடி குளோரின் பவுடர் போடப்பட்டு பொதுமக்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்கப்படுகின்றன என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஏரல் பேரூராட்சியில் அமைந்துள்ள கடைகளுக்கு சீரான வரி விதிக்கப்பட்டும் கடைகளுக்கான குத்தகைத் தொகை நடைமுறையில் உள்ள ஆணைகளின்படி வசூலிக்கப்படுகின்றன.

ஏரல் பேரூராட்சியின் மெயின் பஜாரில் ஆக்கிரமிப்பு ஏதும் இருப்பின் அதனை அகற்றிடும்பொருட்டு 23.10.2022 அன்று மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஏரல் பேரூராட்சியில் நடைபெறும் அனைத்து திட்டப்பணிகளும் பொதுமக்கள் அறியும் வண்ணம் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டு முறையாக ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்படுகின்றன என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்து, இந்நேர்வு தொடர்பாக புகைப்படங்களில் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் எனது 9.12.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்து கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**ஏரல் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 09.12.2022 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

ஏரல் பேரூராட்சி பகுதியில் நடைபெறும் அனைத்துத் திட்டப்பணிகளும் பொதுமக்கள் அறியும் வண்ணம் நாளிதழில்களில் விளம்பரப்படுத்தப்பட்டும், குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, பேரூராட்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உரிய ஆணையின் அடிப்படையில் பணிகள் நல்ல முறையில் செய்யப்பட்டும், பணிகளின் விபரப் பலகை அமைக்கப்பட்டும் பொறியாளர்கள் முன்னிலையில் பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படுகின்றது என்ற விபரம் பணிந்து சமர்ப்பித்துக் கொள்ளப்படுகிறது.

ஏரல் பேரூராட்சி பகுதியில் குடிநீர், பொது சுகாதாரம் அனைத்தும் பொதுமக்களின் அத்தியாவசியப் பணியாக உள்ளதால், மேற்படி பணிகளில் எவ்வித தாமதம் ஏற்படாதவண்ணம் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படுகின்றது என்ற விபரம் பணிந்து சமர்ப்பித்துக் கொள்ளப்படுகிறது.

மனுதாரரால் கேட்கப்பட்டு அனுப்பப்பட்ட தகவல்களின் நகல்கள், பொது சுகாதாரப் பணிகள், குடிநீர் விநியோகம் பணிகளின் புகைப்பட தொகுப்பு இத்துடன் இணைத்து பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

மனுதாரர் தூத்துக்குடி மாவட்டம், ஏரல் பேரூராட்சியில் பலமுறைகேடுகள் நடைபெறுவதாக தெரிவித்து அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு இம்முறை மன்றத்திற்கு புகார் மனு அளித்துள்ளார்.

ஏரல் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலம் மற்றும் அறிக்கையில் ஏரல் பேரூராட்சியில் வீடுகளில் தினசரி குப்பைகள் சேகரித்து அதனை மக்கும் குப்பை மற்றும் மக்கா குப்பை என தரம் பிரித்து மக்கும் குப்பைகள் உரமாக்கப்படுகின்றன எனவும் திடக்கழிவுகளை உரமாக்கும் பொருட்டு தேவையான இடவசதியை செய்து தருமாறு மாவட்ட ஆட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும் இட ஒதுக்கீடு செய்வது தொடர்பாக நேரடியாக மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோரை சந்தித்து இடவசதியை விரைவில் செய்து தருமாறு கோரிக்கை வைக்கப்படும் என தெரிவித்துள்ளார். மேலும், கழிவு நீர் தாமிரபரணி ஆற்றில் கலக்காமல் இருப்பதற்கு Sewage treatment filter Bed அமைக்கவும் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மாதத்திற்கு இருமுறை சுத்தம் செய்யப்பட்டும், தினசரி குளோரினேசன் செய்து பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது எனவும் AMRUT 2.0 திட்டத்தின் Filtration Bed அமைத்து அனைத்து மக்களுக்கும் பயன்பெறும் வகையில் அரசுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது என்றும் மேலும் ஏரல் பேரூராட்சியில் நடைபெறும் அனைத்துத் திட்டப்பணிகளும் பொதுமக்கள் அறியும் வண்ணம் தகவல் பலகையில் இடம்பெறச்செய்தும் நாளிதழ்களில் விளம்பரப்படுத்தப்பட்டு ஒப்பந்தங்கள் கோரப்படுகின்றன என்றும் ஏரல் பேரூராட்சிப் பகுதியில் குடிநீர் பொது சுகாதாரம் அனைத்தும் பொதுமக்களின் அத்தியாவசிய பணியாக உள்ளதால் மேற்படி பணிகளில் எவ்வித தாமதமும் ஏற்படா வண்ணம் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படுகின்றது என தெரிவித்துள்ளார்.

**ஆய்வுக்குப் பின்னர், இம்முறைமன்றத்தால் கீழ்க்கண்ட ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.**

ஏரல் பேரூராட்சியில் உள்ள திடக்கழிவுகளை உரமாக்கும் பொருட்டு தேவையான இடவசதிகள் செய்து தருமாறு மாவட்ட வருவாய் அலுவலர், தூத்துக்குடி அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எனவே, மாவட்ட ஆட்சி தலைவரை நேரில் சந்தித்து வலியுறுத்துமாறு பேரூராட்சி செயல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார். இப்பொருள் குறித்து மனுதாரரும் தூத்துக்குடி மாவட்ட ஆட்சி தலைவரை அணுகுமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

ஏரல் பேரூராட்சியில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் குளோரின் பவுடர் முறையாக போடப்பட்டு தவறாமல் பொதுமக்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்கப்படுவதை நேரில் சென்று கண்காணிக்க கள பணியாளர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பி அதனை செயல்படுத்த பேரூராட்சி செயல் அலுவலர் உறுதிப்படுத்திடவும், கடைகளுக்கு நடைமுறையில் உள்ள அரசாணையின்படி குத்தகைத் தொகையினை நிர்ணயம் செய்யப்பட்டு பேரூராட்சி கணக்கில் செலுத்தப்பட்டு வருவதையும் பொது ஏலத்தில் கலந்து கொண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டும் கடைகள் உள்குத்தகைக்கு விடாமல் இருப்பதை உறுதி செய்யப்பட வேண்டும் எனவும் செயல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார்.

ஏரல் பேரூராட்சியில் கடைவீதிகளில் உள்ள கடைக்காரர்கள் கடைக்கு வெளியே பேரூராட்சி இடத்தையும் ஆக்கிரமிப்பு செய்து வியாபாரம் செய்வதை தடுக்காத பேரூராட்சி கள நிர்வாக அலுவலர்கள் இருப்பது மிகவும் கண்டிக்கத்தக்கது. வணிக கட்டடங்களுக்கு முறையாக வரிவதிப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்து இம்முறைமன்றத்திற்கு அறிக்கை அனுப்புமாறு பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

பேரூராட்சிகளில் பொது சுகாதாரத்தை பேணுவது தலையாயக் கடமையாகும். ஏரல் பேரூராட்சியில் குப்பைகள் மற்றும் பன்றிகள் வளர்க்கும் கூடங்களிலிருந்து வரும் கழிவுகள் நதிநீரில் கலப்பதால் சுகாதார பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, நீர்நிலைகளில் குப்பைகள், கட்டட கழிவுகள், இறைச்சி கழிவுகளை கொட்டுவதை தவிர்த்திடவும் தாமிரபரணி ஆற்றில் மாசு ஏற்படாதவாறு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு ஏரல் பேரூராட்சி செயல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார்.

மேற்கண்ட ஆணைகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கையை குறித்து ஏரல் பேரூராட்சி செயல் அலுவலர் ஒரு விரிவான அறிக்கையினை இம்முறைமன்றத்திற்கு அனுப்பிவைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

The Collector of Thoothukudi is directed to indentify a suitable land parcel as requested in the Executive Officers letter addressed to the District Revenue Officer, Thoothukudi dated 29.03.2019 (copy submitted to this Forum) either in Valavanthan or Siruthondanallur Village for setting up Sewarage Waste Management Plant at the earlist to resolve the garbage issue that cannot brook any more delay in view of its dreadful potential for pollution and contamination of the Thamirabarani river besides the threat of outbreak of hazardous diseases.

The Assistant Director of Town Panchayat and Executive Officer of Eral Town Panchayat are directed to ensure hygenic condition in drinking water storage and supply in the area.

2) The Director of Local Fund Audit is directed to verify whether the shops belonging to the Town Panchayat have been regularly auctioned as per the prevailing practice and Director of Town Panchayat's instructions and the revenue due to the Town Panchayat has been collected. If there is loss due to delay and omission the quantum may be calculated accordingly and recovered from the Executive Officers responsible for such default.

3) The shops being run on the pavements as per the petitioner's complaint should be evicted forthwith and any loss of revenue on account of this has to be recovered from the Executive Officers and other Town Panchayat officials concerned by not initiating meaningful action on the encroachments. The Local Fund Audit team should verify this aspect also during their inspection. (Action Executive Officer of Town Panchayat / Assistant Director of Town Panchayat, Director, Local and Fund Audit)

4) The lethargy and inaction on the part of the Executive Officers who did not make any effective efforts to call on the Collector and District Revenue Officer for alienation of the land required for Sewarage waste Management Bio-Composting are

condemned by this Forum. The lack of supervisory efficiency and leadership quality on the part of the Assistant Director of Town Panchayat of the District is censured equally. The Director of Town Panchayat is instructed to issue disciplinary proceedings against both the Assistant Directors of Town Panchayat and Executive Officers of Town Panchayat concerned for such a long interregnum after sending the letter in 2019. The Director of Town Panchayat is also instructed to keep a close watch over the disposel of waste in the Eral Town Panchayat by appropriate technical solutions and prevent any outbreak of infections and health hazards.

2022–ஆம் ஆண்டு, டிசம்பர் 22–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. M.A. சொக்கலிங்கம்,
4/3, மூப்பனார் மேலத்தெரு,
ஏரல்–628 801, தூத்துக்குடி மாவட்டம்.
2) செயல் அலுவலர்
ஏரல் தேர்வுநிலை, தூத்துக்குடி மாவட்டம்.
3) பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திருநெல்வேலி மாவட்டம்.
4) மாவட்ட ஆட்சியர்,
தூத்துக்குடி மாவட்டம்.
5) மாவட்ட வருவாய் அலுவலர்,
தூத்துக்குடி மாவட்டம்.
6) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
நகர்நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.
7) இணை இயக்குநர்(பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் அலுவலகம்,
நகர் நிர்வாக அலுவலகம் / ஆணையாளர்,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி. நகர்,
சென்னை–28 (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக.